# <u>பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்: ஒரு கடுமையான சட்ட முறை</u>

நீதி அமைச்சர் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததுடன், அதன் முதல் வாசிப்பு 2024 ஆம் ஆண்டு, ஜனவரி 10 ஆம் திகதியன்று இடம்பெற்றது. சட்டமூலம் பிரச்சினைகளுடன் கட்டமைந்ததாக இருந்த அதேவேளை, சட்டமூலத்துடன் இரண்டு பிரதான பிரச்சினைகள் மற்றும் குறிப்பாக அரசாங்கத்திற்கு எதிராக மக்கள், சிறுபான்மையினர் மற்றும் மாற்றுக் கருத்துக் கொண்டவர்களின் சுதந்திரங்கள் மீது சட்டமூலம் கொண்டிருக்கும் தாக்கம், அது வரையப்படும் செய்முறையின் போது தொடர்ந்தும் இருந்தது.

உண்மையில், அரசாங்கம் 'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை' முதன் முதலாக 2018 இல் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தது. உயர் நீதிமன்றத்தில் அந்தச் சட்டமூலம் சவாலுக்கு உட்படுத்தப்பட்டது, சட்டமூலத்தின் சில பகுதிகளுக்கு உயர் நீதிமன்றம் அனுமதியளித்தது, அரசாங்கம் அந்தச் சட்டமூலத்தை மேற்கொண்டு ஒரு போதும் முன்னெடுக்கவில்லை. பின்னர், 2023 ஆம் ஆண்டு, மார்ச் மாதத்தில், ஒரு புதிய சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது, இந்தத் தடவை 'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம்' என அழைக்கப்பட்ட அது வடிவில் முன்னைய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை ஒத்ததாக இருந்தாலும், அதன் விடயதானம் சில அம்சங்களில் கடுமையான பயனுடையவையாக இருந்தன. இந்தச் சட்டமூலத்திற்கு எதிரான கண்டனம் பலமானதாகவும், பரந்ததாகவுமிருந்து, சிவில் சமூகத்தின் பல பகுதிகளும் சட்டமூலத்திற்கு எதிராக ஒன்றிணைந்து தங்கள் கரிசனைகளைக் குரல் எழுப்பின. இதற்கான பதிலிறுப்பாக, சட்டமூலத்தை அது மீளப் பெறுவதாக அரசாங்கம் அறிவித்ததுடன், மாற்றங்களுக்காக முன்மொழிவுகளையும் கோரியது. அதன் பின்னர், மீண்டும் சட்டமூலத்தின் புதிய வடிவம் 2023 ஆம் ஆண்டு, செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்டது. ஆனால், சட்டமூலம் பற்றிப் பொதுக் கருத்துக்கள் சமர்ப்பிக்கப்பட்டபோதிலும் கூட, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் இந்தப் புதிய வடிவமும் அதிகளவிற்கு முன்னையதை ஒத்ததாகவே இருந்தது. சட்டமூலம் பின்னர் பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் பிரசுரிக்கப்பட்டது, ஆனாலும் அது பாராளுமன்றத்திற்கு ஒரு போதும் சமர்ப்பிக்கப்படவில்லை. 2023 ஆம் ஆண்டு, ஒக்டோபர் 18ஆம் திகதியன்று, சட்டமூலம் மீளவும் மீளப்பெறப்பட்டதாக சபாநாயகர் அறிவித்தார்.

தற்போது பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்டமூலமும் செப்டெம்பர் 2023 இன் பயங்கரவாதத் எதிர்ப்புச் சட்டமூலத்தின் அதே வடிவம் என்றே இப்பொழுது தோன்றுகிறது. சட்டமூலத்தின் வடிவங்கள், பல்வேறு சமயங்களில் சமர்ப்பிக்கப்படல் மற்றும் மீளப்பெறல் எனச் சட்டச் செயன்முறையில் பல படிமுறைகள் இடம்பெற்ற அதேவேளை, சட்டத்தை உருவாக்கும் செயன்முறையில் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்றான, தவிர்க்கமுடியாத மிகவும் முக்கிய பங்குதாரர்களான, பொதுமக்களின் கருத்துக்கள் அல்லது அபிப்பிராயங்களைச் கேட்பதும், கவனத்தில் கொள்வதும் முற்றிலும் உதாசீனம் செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் வரையப்படும் அநேகமான சட்டங்களுடனான வகையிலும், மற்றும் அதன் பயனாக ஒரு சட்டம் நாட்டு மக்களின் தேவைகளைப் பெரிதும் பிரதிநிதித்துவப்படுத்தாத நிலையிலும், பயங்கரவாத் எதிர்ப்புச் சட்டமூலத்திற்கு பொதுமக்கள் அபிப்பிராயத்தைக் கோருவது ஒரு கேலிக்கூத்தாக அமைகிறது.

உண்மையில், இந்தச் சட்டம் நிறைவேற்றப்படின், அது அவர்களது உரிமைகளை மட்டுப்படுத்தும் என்பதை இலங்கையின் சிறுபான்மையினரே அறிந்திருக்கின்ற நிலையில், அதற்கெதிரான கண்டனங்களின் மத்தியிலும், இலங்கையிலான ஒரு நடைமுறைப் போக்குப் போன்று, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் வரைதலும் இருட்டிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் 2023 ஆம் ஆண்டு, நவெம்பர் மாதத்தில் நடத்தப்பட்ட ஒரு

கருத்துக் கணிப்பு, இலங்கையின் பொதுமக்களில் 38.5% ஆனவர்கள் மட்டுமே உத்தேசிக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் பற்றி அறிந்திருந்தனர் என்றும் இந்தத் தொகையில் பெருப்பான்மையான 72.6% ஆனவர்கள் அதிகாரத்திலுள்ளவர்கள் தங்களது சொந்த நலனிற்காக சட்டமூலத்தைத் துஷ்பிரயோகிப்பர் என்பதைக் குறிப்பிட்டு சட்டமூலத்தை ஏற்க மறுத்ததைக் காட்டியது.

பயனுறுதியான பயங்கரவாத எதிர்ப்பு முயற்சிகள், பயங்கரவாதத்தின் காரணங்கள் மற்றும் அவ்வாறான நடத்தைகளுக்கு மக்களை எவை உந்தித் தள்ளுகின்றன என்பவற்றின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனினும், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் பெரும்பாலான பகுதி, சிறுபான்மையினர், பத்திரிகையாளர்கள், மனித உரிமைப் பாதுகாவலர்கள் மற்றும் தவறான நேரத்தில் தவறான இடத்தில் இருந்த சாதாரண மக்களையும் கூட அடக்கி ஒடுக்குவதற்குப் பயன்பட்ட அரச அனுசரனையிலான பயங்கரவாதத்தின் ஒரு கருவியாக, பல தசாப்தங்களாக, இருந்த, அதன் முன்னோடிச் சட்டமான, கொடுமையான பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் அடிச் சுவடுகளையே பின்பற்றுகிறது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் இந்த இருண்ட மரபு மற்றும் எங்களது சட்டத்தின் ஒரு பகுதியாக அதன் தொடர்தலுக்கான பரந்த எதிர்ப்பு என்பவை ஒரு புதிய சட்டம் வரையப்படும் பொழுது கவனத்தில் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

பயங்கரவாதத்தின் குறிக்கோளான தீவிரமான நடவடிக்கைகளை விட அதிகமானவற்றைக் கையாள்வதற்கு உபயோகிக்கப்படுவதற்கு புதிய சட்டம் தன்னை அனுமதிக்கிறது. 2023 ஆம் ஆண்டு, மார்ச் மாதம், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் முதலில் பிரசுரிக்கப்பட்ட நேரம், மற்றும் சட்டமூலத்தில் உள்ளடங்கியுள்ள பயங்கரவாதம் பற்றிய பரந்த, தெளிவற்ற வரையறைகள் என்பவற்றைக் கவனத்தில் கொள்கையில், அது அரசாங்கத்திற்கு எதிராக எழக்கூடிய ஏதேனும் எதிர்ப்புகளை அடக்குவதற்கான ஒரு கருவியாக நிச்சயம் பயன்படுத்தப்படும் நோக்கத்தையே காண்பிக்கிறது. அத்தோடு, இச்சட்டமூலம், ஊரடங்குச் சட்டங்கள் ஏதேனும் ஸ்தாபனங்களுக்கு எதிராக தடை உத்தரவுகள் என்பவற்றை அறிவிப்பதற்கு மற்றும் அரச அல்லது தனியார் இடங்களிற்கு பொதுமக்களுக்கு மட்டுப்படுத்தல்களை விதிப்பதற்கான பரந்த அதிகாரங்களையும் ஜனாதிபதிக்கு அது அளிக்கின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பார்க்கப்பட்ட, முக்கியமாக நீண்ட கால ஆட்சித்துறை தடுப்புக் காவலில் இருப்பதும் கூட, புதிய சட்ட வரையின் ஒரு பகுதியாக தொடர்ந்துமுள்ளது.

பயங்கரவாதத் எதிர்ப்புச் சட்டமூலம் மற்றும் அதன் உள்ளடக்கங்களை உருவாக்கும் செயன்முறைகள் இரண்டும், மக்களின் உண்மையான தேவைகளுக்கும் குறைந்த அல்லது எந்தக் கவனமும் கொள்ளாது, ஆனால் அரசாங்கத்தைப் பாதுகாப்பதை இலக்காகக் கொண்டுள்ளன என்பதையே தெளிவுபடுத்துகின்றன. இச்சட்டம் நிறைவேற்றப்படின், நாடு இன்னும் பல தசாப்தங்களுக்கு அடக்குமுறை, சித்திரவதை, மற்றும் துஷ்பிரயோகம் என்பவற்றுக்கு ஆளாகுவதையே காண நேரிடும்.